**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் II பரீட்சை – 2022 சனவரி**

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## பகுதி A

**வினா இல. 01**

இது 25 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவாகும். வினாக்கள் முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இப்பகுதிக்கு முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**1.1** இந்த வினா நிதிக் கூற்று மூலகங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**1.2** இந்த வினா சொத்து விற்பனை பற்றிய அறிவையும் விற்பனை மீதான இலாபம் அல்லது நட்டத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிய அறிவையும் பரீட்சித்திருந்தது. கணிசமானளவு பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.3** இந்த வினா தனிச்சங்களை வைத்திருப்பவர்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.4** இந்த வினா 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர் ஆயினும் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.5** இந்த வினா மேந்தலை உறிஞ்சல் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர்.

**1.6** சொத்து ஒன்றினை நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்துவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய இரு தேர்வு நிபந்தனைகளைக் குறிப்பிடுமாறு இங்கு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டு தேர்வு நிபந்தனைகளைக் குறிப்பிடத் தவறியிருந்தனர்.

**1.7** இங்கு துண்டு வீத முறைமையின் மூன்று அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடை அளிக்கவில்லை. அவர்களிடம் துண்டு வீத முறைமை பற்றிய சரியான அறிவு காணப்படவில்லை.

**1.8** இந்த வினாவில் பங்குடமை வியாபாரம் ஒன்றின் அர்ப்பணிப்பு விகிதத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் அதனைச் சரியாகச் செய்திருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் சரியான விடை அளிக்க முடியவில்லை.

**1.9** இங்கு, ஏற்பாடு மற்றும் நிகழத்தக்க பொறுப்பு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளிக்கத் தவறியிருந்ததுடன் மிகச் சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே விடையளிக்க முடிந்திருந்தது.

**1.10** இந்த வினா FIFO முறையின் அடிப்படையிலான தொக்கின் பெறுமதியை கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளிடம் களஞ்சியப் பேரேட்டின் அமைப்பு தொடர்பில் எவ்வித யோசனைகளும் காணப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

இங்கு, தனியுடமை வியாபாரம் ஒன்றிற்காக வழங்கப்பட்ட பூரணமற்ற நிதித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சை மீதியைத் தயாரிப்பது பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் எடுப்பனவுகளுக்கான சீராக்கம், கொள்வனவுக்கான சீராக்கம், ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி இருப்பு (விற்பனைக் கிரயம்) ஆகியன பற்றிய சரியான புரிதலைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. மேலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஆரம்ப மூலதனத்தைச் சரியாக இனங்காணத் தவறியிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்குப் பதிலாக நிதி நிலைக் கூற்றையும் வருமானக் கூற்றையும் தயாரித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை**

### வினா இல. 03

இங்கு பங்குடமைக் கணக்குகள் பற்றிய அடிப்படை அறிவு பரீட்சிக்கப்பட்டது. இவ்வினாவில் பங்காளர்களின் மூலதனக் கணக்கையும் நடைமுறைக் கணக்கையும் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் மாத்திரமே நன்றாக விடையளித்து முழுமையான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளிடையே பங்குடமைக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கு பற்றிய தெளிவான அறிவு காணப்படவில்லை. இதனால் ஒவ்வொரு கணக்கிற்கும் தேவையான சம்பந்தப்பட்ட பதிவுகளை ஏற்பிசைவு செய்ய முடியவில்லை.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு :

(1) நடைமுறைக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்ட நன்மதிப்பு மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்.

(2) பங்காளரின் ஓய்வின்போது நன்மதிப்பை கணிப்பிடுவதில் போதிய அறிவு காணப்படாமை

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

### வினா இல. 04

இந்த வினா இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் வருமானக் கூற்று மற்றும் வருமான, செலவினக் கணக்கு தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனராயினும் முழுமையான புள்ளிகளையும் பெற முடியவில்லை. அத்துடன் சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர்.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு :

(a) வருமானக் கூற்றில் பதியப்பட வேண்டிய பதிவுகள் வருமான, செலவினக் கணக்கிலும் வருமான, செலவினக் கணக்கில் பதியப்பட வேண்டிய பதிவுகள் வருமானக் கூற்றிலும் பதியப்பட்டிருந்தன.

(b) சில பரீட்சார்த்திகள் வரவு மற்றும் செலவுப் பதிவுகளை மாறி மாறிப் பதிவு செய்திருந்தனர்.

(c) பல பரீட்சார்த்திகளால் அங்கத்துவச் சந்தாவைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை.

(d) விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மீதான தேய்மானமானது வருமான, செலவினக் கணக்கிலும் வருமானக் கூற்றிலும் சரியாகச் சீராக்கம் செய்யப்படவில்லை.

(e) உணவுச்சாலைச் செலவினங்களும் விளையாட்டுக் கழகச் செலவினங்களும் சில பரீட்சார்த்திகளால் சரியாகப் பகிரப்படவில்லை.

(f) சில பரீட்சார்த்திகள் சம்பளங்களும் கூலிகளும், மின்சாரம், நீர் மற்றும் கட்டடம் மீதான வாடகை என்பவற்றை வினாவில் அறிவுறுத்தியதன்படி பகிர்ந்திருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

**(A)** இந்த வினா, ஊழியருக்கான வாராந்த சம்பாத்தியத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிப் பரீட்சித்திருந்தது. முழு விடையும் தவறாகக் காணப்பட்டன. ஏனெனில் காலமும் சம்பந்தப்பட்ட கணியமும் இந்த வினாவுக்கு விடையளிக்கும்போது பிழையாக விளங்கிக் கொள்ளப் பட்டிருந்தன. மேலும், பல பரீட்சார்த்திகள் சரியான சம்பாத்தியத்தைக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

**(B)** **(a)** இந்த வினா சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ) மற்றும் மறு கட்டளை மட்டம் ஆகியவற்றை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிப் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகளுக்கு, சரியான அமைப்பு தெரியாத காரணத்தால் விடையளிக்க முடியவில்லை. மேலும், பல பரீட்சார்த்திகள் வருடாந்த நிறுத்தி வைத்தல் கிரயத்தைத் துல்லியமாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் மறு கட்டளை மட்டத்தை கணிப்பிட்டிருந்தனர் ஆயினும் மிகச் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

## வினா இல. 06

**(A)** இந்த வினா, உற்பத்தி நிறுவனம் ஒன்றிலுள்ள பல்வேறு பிரிவுகளுக்குமிடையிலான மேந்தலை உறிஞ்சல் பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகள் மேந்தலை உறிஞ்சல் அட்டவணையைச் சரியாகத் தயாரித்திருந்தனராயினும் சேவைப் பிரிவின் கிரயமானது உற்பத்திப் பிரிவுகளுக்கிடையில் சரியாகப் பகிரப்படவில்லை. இங்கு, சில பரீட்சார்த்திகள் விடையை ஆயிரங்களில் பெற முயற்சித்திருந்தனர் என்பதுடன் சில பெறுமானங்கள் ஆயிரத்திற்கு மட்டப்படுத்தாமல் எடுக்கப்பட்டிருந்தன.

**(B)** இந்த வினா, பணியொன்று தொடர்பில் அறவிடப்பட வேண்டிய விலையை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிப் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர். சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இலாபகங்களைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்ததால் முழு புள்ளிகளையும் கணித வழு காரணமாக இழந்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

# பகுதி C

**வினா இல. 07**

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பைப் பரீட்சித்திருந்ததுடன் இது (a), (b) என இரு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. பகுதி (a) ஆனது முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பையும் பகுதி (b) ஆனது நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பையும் பரீட்சித்திருந்தது.

இங்கு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் முகாமையின் பாவனைக்காக முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் ஐந்து பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு:**

(1) வருமானக் கூற்றிற்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தை சில பரீட்சார்த்திகள் பின்பற்றியிருக்கவில்லை.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் இறுதித் தொக்குச் சீராக்கத்தைச் சரியாக சீராக்கம் செய்திருக்கவில்லை. அவர்கள் தொக்கு இழப்பிற்காக, தொக்கிற்கான புதிய கணக்கீட்டு நியமங்களைக் கவனத்தில் கொண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இதனைச் சரியாகச் செய்திருந்தனர்.

(3) பெரும்பாலான பரீட்சார்த்திகளால் தமது செய்கை முறைகளில் வருமான வரிச் சீராக்கம் காட்டப்படவில்லை. அவர்களில் பலர் சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான வருமான வரித் தொகையினைச் சரியாகக் கணிப்பிடவில்லை.

(4) அதிகளவான பரீட்சார்த்திகள், வெள்ளத்தினால் அழிவடைந்த தொக்குகளின் இறுதித் தொக்கு சீராக்கத்தைச் சரியாகச் சீராக்கம் செய்திருக்கவில்லை. அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி உரிமைக்கோரிக்கையும் சரியானவாறு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(5) விற்பனைப் பணிசை ஒரு செலவினமாக இருந்த போதிலும், சிலர் அதனை வேறு வருமானமாகக் கருதியிருந்ததுடன் அதனை வருமானக் கூற்றில் பதிவு செய்திருந்தனர்.

(6) அதிகளவான பரீட்சார்த்திகள் தனிச்ச வட்டியைச் சரியாகக் கணிப்பிடவில்லை. அவர்கள் வருடாந்த வட்டியைக் கணிப்பிடாது, செலுத்திய தனிச்ச வட்டியை மாத்திரம் கணக்கிற் கொண்டிருந்தனர்.

(7) அதிகளவான பரீட்சார்த்திகள், அறவிட முடியாக் கடன் ஏற்பாட்டின் கீழ், வருமானக் கூற்றில் காட்டியிருந்த ரூபா 3,310,000/- அறவிட முடியாக் கடனைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

(8) சில பரீட்சார்த்திகளால் அட்டுறுக்களும் முற்கொடுப்பனவுகளும் நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காட்டப்படவில்லை.

(9) சில பரீட்சார்த்திகளிடம், தேய்மானமானது வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்படக்கூடியது என்பது பற்றிய எவ்வித யோசனைகளும் காணப்படவில்லை. அவர்கள் திரண்ட தேய்மானத்தை P & L இல் பதிவு செய்திருந்ததால் ஐந்து புள்ளிகளைத் தவற விட்டிருந்தனர்.

(10) நிருவாகச் செலவினம் மற்றும் விநியோகச் செலவினத்திற்கான விபரமான செய்கை வழிகள் சில பரீட்சார்த்திகளால் இணைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், அவர்கள் சில புள்ளிகளை இழந்திருந்தனர்.

(11) சில பரீட்சார்த்திகள் ஆண்டிற்கான வருமான வரித் தொகையைச் சரியாக இனங்காணவில்லை.

(12) சில பரீட்சார்த்திகள் சில பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டியிருந்ததுடன் சில பெறுமானங்களை ஆயிரங்களில் எடுத்திருக்கவில்லை. இதனால், சில பரீட்சார்த்திகள் துல்லியமற்ற தொகைகள் பதிவு செய்யப்பட்டதால் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர்.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

(1) அட்டுறுவான EPF & ETF மற்றும் முன்செலுத்திய வாடகை என்பன நிதி நிலைக் கூற்றில் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் சரியான திரள் தேய்மானத் தொகைகளைக் குறிப்பிடாததன் காரணமாக குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

(3) பெரும்பாலான பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையைச் சரியாகக் காட்டியிருக்கவில்லை.

(4) சில பரீட்சார்த்திகளால் சொத்துக்கள் மீதான தேய்மானமானது செய்கைவழித் தாள்களில் கணிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது நிதிக் கூற்றுக்களில் சரியான இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய தனிச்ச வட்டித் தொகையினை தனிச்சத் தொகையுடன் சேர்த்திருந்ததுடன் இதனை நீண்ட காலப் பரிப்புகளின் கீழ் சமர்ப்பித்திருந்தனர்.

(6) பெரும்பாலான பரீட்சார்த்திகள் தொக்குச் சேதத்தினை இறுதித் தொக்கிலிருந்து கழித்திருக்கவில்லை.

(7) சேதமடைந்த தொக்கிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த காப்புறுதித் தொகை நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டப்படவில்லை.

(8) சில பரீட்சார்த்திகள் அறவிட முடியாக் கடனுக்கான ஏற்பாட்டை வியாபார வருமதிகளிலிருந்து கழித்திருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

\- - - -

**<u>பரீட்சையில் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்</u>:**

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தை நன்றாகப் படித்து அதன் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(2) செயல் வினைச்சொற்களின் வரைவிலக்கணங்களைப் புரிந்துகொண்டு, வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்துப் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

(3) கடந்தகால வினாத்தாள்களின் உள்ளடக்கத்தைப் படிப்பதுடன் ஆகக்குறைந்தது கடந்த 2 – 3 பரீட்சை வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதுடன் வினாக்கள் எந்த வழிமுறையில் அமைக்கப்படுகின்றன என்பதையும் புரிந்துகொள்ள முயற்சித்தல் வேண்டும்.

(4) பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு முன்னராக நேர அடிப்படையில் கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்க்க வேண்டும். இது பரீட்சையில் நேர முகாமைத்துவத்தை மேம்படுத்தும்.

(5) பரீட்சார்த்திகள் பரீட்சையில் நேர்த்தியான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(6) பரீட்சார்த்திகள் வினாத்தாளிற்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்தல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொண்டு, பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்கும் பொருட்டு தமது மனதைத் தெளிவாகவும் சமநிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

(8) பரீட்சார்த்திகள் தரப்பட்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கான நேர ஒதுக்கீட்டை மேற்கொள்ள வேண்டும், இதனால் பரீட்சார்த்திகள் தரப்பட்ட சகல வினாக் களுக்கும் பயனுறுதிமிக்க வகையில் விடையளிக்க இயலுமாக இருக்கும்.

(9) தேவைப்படுத்தப்பட்ட சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பொருத்தமாக இலக்கமிடப்பட்டுள்ளதா என்பதையும் விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர் இரு தடவைகள் சோதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

- * * * -